**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 313/2021 |
| Name | : Murugan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2024

எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

நான் மைவாடி பஞ்சாயத்து ஊராட்சி மன்ற தலைவராக பணியாற்றி வருகிறேன். 14.04.2021 ம் தேதி சித்திரை 1ம் தேதி நான் டீ கடைக்கு போனேன். மைவாடி பஞ்சாயத்திற்கு உட்பட்ட கருப்புச்சாமி புதுருக்கு போகும் வழியில் கழிவு வாடை வீசுவதாக பொதுமக்கள் என்னிடம் புகார் சொன்னார்கள். உடனே பொதுமக்களும் அனைவரும் ஒன்று சேர்ந்து உடனே அங்கிருந்து அந்த இடத்துக்கு போனோம். அப்புறம் அப்போது அங்கே லாரியில் கொண்டு வந்து மருத்துவ கழிவுகளை கொட்டிக் கொண்டு இருந்தார்கள். நான் இது சம்மந்தமாக மடத்தக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆக செய்யப்படுகிறது.** மேற்படி மருத்துவ கழிவுகளளை கொட்டிய நபர்களின் பெயரை பொது மக்கள் சொன்னார்கள். அவர்களை நான் பார்க்கவில்லை. மருத்தவ கழிவை கொட்டுவதற்காக வந்த லாரியின் உரிமையாளர் பெயர்

சாகுல் அமீது என நான் தெரிந்து கொண்டேன் டிரைவரை நான் பார்க்கவில்லை என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை
மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.24 15:25:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 313/2021 |
| Name | : | Sagadevan |
| P.W. | : | 12 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2024

எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

நான் நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். சாட்சி சொல்லிபுட்டு போனவர் எங்களுடைய பஞ்சாயத்து தலைவராவார். 14 ஆம் தேதி நாலாவது மாசம் 2021 வது வருஷம் மாலை 6 மணிக்கு நானும் வேலுச்சாமி என்பவரும் கருப்புசாமி புதூருக்கு போகலாம் என்று போய்க்கொண்டிருந்த போது டிப்பர் லாரியில் குழிபாறையில் மண்ணு கொட்டிக் கொண்டிருந்தார்கள். கெட்ட வாடை அடித்தது. நாங்கள் இருவரும் சேர்ந்து எங்களுடைய அந்த வண்டியை நிறுத்தி என்ன என்று விசாரித்த போது மருத்துவமனையில் இருந்த கழிவுகளான ஊசி பாட்டில் மருந்து பாட்டில்கள் பலவகையான மருத்துவ கழிவுகளை போன்றவைகளை எல்லாம் சேர்த்து கொட்டிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை பிடித்து ஊர் மக்களை அனைவரையும் வரச் சொல்லி இது சம்பந்தமாக பஞ்சாயத்து தலைவருக்கு போன் செய்து தகவல் சொல்லி அவரும் வந்தார். நாங்கள் மேற்படி நபர்களை பிடித்து வைத்துக் கொண்டு இது சம்பந்தமாக.

போலீசுக்கு தகவல் சொன்னோம். போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். மறுநாள் காலை உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கே வந்து எங்களை விசாரணை செய்தார். மேற்படி மருத்துவக் கழிவை கொட்டிய டிப்பர் லாரியின் பதிவு எண் 16 16 ஆகும் அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயரை விசாரித்த போது நவாப் என்று சொன்னார். அவரைப் பார்த்தால் தெரியும். உரிமையாளர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி மருத்துவக் கழிவை கொட்ட வந்த லாரியை ஓட்டி வந்த நபர் ஆவார். மேற்படி லாரியில் உடன் வந்த ஒரு நபர் ஓடிவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் கொடுத்துடுவாங்க சரிங்களா.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை
மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.10.24 15:25:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்